Academic Research News
*Peer-Reviewed Journal*
10
Volume 4, Issue 1 June 2026
E-ISSN: 2584-167X

# Feminist Perspectives in Islam

**L. Sophia,** Ph.D Researcher (Full Time), Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0000-9270-8628
**Dr. D. Nithya,** Supervisor, Assistant Professor, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore, Tamil Nadu, India.

## Abstract

*Islam is based on the noble principle that all of the human beings are equal in God's creation. Although "feminism" is considered a modern term, internal evidence shows that Islam legally guaranteed the social, economic and spiritual rights of women 1400 years ago. Women are the primary reason for the emergence of humanity on this earth. At a time when women were considered a burden and mere objects of consumption, Islam has brought about a revolutionary change by granting them the right to life (prevention of female infanticide), the right to education, property rights, the right to divorce, and social dignity. The primary objective of this research article, Feminist Thoughts as Informed by Islam, is to identify women as unique individuals and the foundation of society, in accordance with the Prophet's saying, "Women are the equal half of men." Rather than seeing women as enslaved people or weak, Islam identifies women as unique individuals and the foundation of society.*

**Keywords:** Islam, Female Rights, Social, Economic, Spiritual.

## References

[1] Ilampirai. *Nee Ezhutha Marukkum Enathazhagu*. p. 44.
[2] Ilampirai. *Nee Ezhutha Marukkum Enathazhagu*. p. 45.
[3] Bakkiyameri. *Thamizh Ilakkiya Varalaru*. p. 23.
[4] Ilampirai. *Nee Ezhutha Marukkum Enathazhagu*. p. 50.
[5] Ilampirai. *Nee Ezhutha Marukkum Enathazhagu*. p. 51.
[6] *Thiru Kuran*. 30:21.
[7] *Thiru Kuran*. 27:18.
[8] *Thiru Kuran*. 25:11.
[9] *Thiru Kuran*. 16:13.
[10] Madhusavimalanantham. *Thamizh Ilakkiya Varalaru*. p. 23.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*

11

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

# இசுலாம் உணர்த்தும் பெண்ணியச் சிந்தனைகள்

**லா. சோபியா,** முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) தமிழ்த்துறை,
பி எஸ் ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0000-9270-8628
**முனைவர் து.நித்யா**, நெறியாளர், உதவி பேராசிரியர், தமிழ்த்துறை, பி எஸ் ஜி கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர், கோவை, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

*இறைவனுடைய படைப்பில் மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே என்ற உயரிய தத்துவத்தை அடித்தளமாகக் கொண்டது இசுலாம். "பெண்ணியம்" என்பது நவீன காலத்தில் உருவான ஒரு சொல்லாகக் கருதப்பட்டாலும், 1400 ஆண்டுகளுக்கு முன்பே பெண்களுக்குரிய சமூகம், பொருளாதாரம் மற்றும் ஆன்மீக உரிமைகளை இசுலாம் சட்டபூர்வமாக உறுதி செய்தது என்பதை அகச்சான்றுகளின் வழி அறியலாகின்றது. இந்த மண்ணுலகத்தில் மனிதகுலம் தோன்றியதற்கு முதன்மைக் காரணமாக பெண்ணே திகழ்கின்றாள். அப்படிப்பட்ட பெண்களைச் சுமையாகவும், வெறும் போகப் பொருளாகவும் கருதிய ஒரு காலத்தில், அவர்களுக்கு உயிர் வாழும் உரிமை (பெண் சிசுக்கொலை தடுப்பு), கல்வி கற்கும் உரிமை,சொத்துரிமை மற்றும் மணவிலக்கு உரிமை, சமூக மதிப்பு ஆகியவற்றை வழங்கியதன் மூலம் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை இசுலாம் ஏற்படுத்தி இருக்கிறது. "பெண்கள் ஆண்களின் சரிபாதி" என்ற நபிமொழிக்கேற்ப, பெண்ணை அடிமையாகவோ அல்லது பலவீனமானவளாகவோ பார்க்காமல், ஒரு தனித்துவமான ஆளுமையாகவும், சமூகத்தின் அச்சாணியாகவும் இசுலாம் பெண்களை அடையாளப்படுத்துகிறது என்பது "இசுலாம் உணர்த்தும் பெண்ணியச் சிந்தனைகள்" எனும் இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** இஸ்லாம், பெண் உரிமைகள், சமூகம், பொருளாதாரம், ஆன்மீகம்..

## முன்னுரை

இசுலாம் என்பது வெறும் சமயம் மட்டும் அல்ல. அது முழுமையான வாழ்வியல் நெறியின் வெளிப்பாடாகும். அதாவது இசுலாத்தில் கலிமா (இறைவன் ஒருவனே என்ற இறை அச்சம்), தொழுகை (இறைவழிபாடு), நோன்பு, (இறைவனுக்காக விரதம் இருத்தல்), ஜக்காத்து (தான தர்மம்), ஹஜ் (இறை பயணம்) எனும் ஐந்து கருத்தியல்கள், இசுலாத்தின் ஐந்து தூண்களாகக் கட்டமைக்கப்பெற்றுள்ளது. மனித வாழ்வில் ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் எப்படி வாழக் கூடாது என்பதையும், பெண்களின் நிலைப்பாடு குறித்தும் இசுலாத்தின்நெறி வழி நின்று அறியுமாறு "இசுலாம் உணர்த்தும் பெண்ணியச் சிந்தனைகள்" எனும் இக்கட்டுரை அமையலாகின்றது.

## பெண்மை

பெண்மை என்பது ஆண்மைக்கு முற்றிலும் எதிரான பாலினமாகும். அதனால் ஒரு ஆண்மகனால் பெண்மையின் மனதை ஊடுருவி பார்க்க முடியாது. கடலின் ஆழத்தைக் கூட அளந்து விட முடியும் ஆனால் ஒரு பெண்ணின் மனதை புரிந்து கொள்ள முடியாது என்பார்கள். தற்காலத்தில் உள்ள சமூகத்தில் பெண்களுக்கு எதிராகப் பல பிரச்சனைகள் நடந்து வருகிறது அப்பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வகையில் ஒரு பெண் தன்னை பக்குவமாக்கிக் கொள்கிறாள் என்று இசுலாம் கூறுகிறது.

## பெண்ணின் பெருமை

பெண் என்பவள் மலர் போன்றவள். ஒரு மலரை மென்மையாகக் கையாள வேண்டும்.

**Volume 4, Issue 1 June 2026** **E-ISSN: 2584-167X**

பெண் என்பவள் பிறப்பாலும் எண்ணிக்கையாலும் ஆணுக்கு நிகரானவள். அவள் ஒரு ஆணின் வாழ்க்கையில் தாயாய், உடன் பிறந்தவளாய், மனைவியாய், மகளாய் இணைந்து வாழ்கிறாள். ஒரு ஆண்மகனைத் தன் கருவில் சுமந்து, உடல் வருத்தங்களைத் தாங்கி பிரசவித்து தன் பாலையும், அன்பையும் ஊட்டி அவனை வளர்த்து அவனை செம்மைப்படுத்துவது ஒரு பெண்ணே ஆவாள்.

பெண்ணின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் வகையில், இசுலாம் தாய்க்கு மிக உயர்ந்த மதிப்பை வழங்கியுள்ளது. **"தாயின் காலடியில் சொர்க்கம்"**[1] என்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழி, அன்னையின் மகத்துவத்தை உணர்த்துகிறது. தந்தையை விட மூன்று மடங்கு அதிக உரிமை மற்றும் மரியாதைக்கு உரியவர் தாய் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளதைப் பல ஹதீசுகளில் காணமுடிகிறது.

**"மங்கையராய் பிறப்பதற்கே – நல்ல**
**மாதவம் செய்திடல் வேண்டுமம்மா!"**[2]

என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பெண்ணின் பெருமையைப் பற்றிக் கூறியுள்ளார். அத்தகு போற்றுதலுக்குரிய பெண்கள் இன்றும் பல வீடுகளில் அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

**வேலைக்கு செல்லும் பெண்களின் துயரநிலை**

இசுலாத்தில் பெண்கள் வேலை செய்வது அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். பெண்கள் தங்கள் குடும்பத்தில் அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளை முடித்து விட்டுப் பிறகு வருவாய் தேடி வேலைகளுக்குச் செல்லும் போது பணிச்சுமை காரணமாக மிகவும் துன்பப்படுகின்றனர். இதற்கு வழி கூறும் வகையில், இசுலாம் பெண்கள் தங்கள் வீட்டிலிருந்தே தங்கள் தொழிலைச் செய்யலாம் என்று கூறுகிறது.

கல்வி, மருத்துவம், மற்றும் சமூகத் தேவைகளுக்காகப் பெண்கள் பணிபுரிவதை இசுலாம் ஊக்குவிக்கிறது. சுய சம்பாத்தியம், சொத்துரிமை, மற்றும் வணிகம் செய்யப் பெண்களுக்கு முழு உரிமை உண்டு. குடும்பப் பொறுப்புகளைப் புறக்கணிக்காமலும், இசுலாமிய வரம்புகளை (ஹிஜாப், தனிமை தவிர்த்தல்) பின்பற்றியும், தகுந்த சூழலில் பெண்கள் பணிபுரியலாம் என்று இசுலாம் கூறுகிறது.

**"கூலி நெல்ல தூக்கிக்கிட்டுக்**
**எட்டி அடிவச்சும்**
**எட்டுமணி ஆச்சுதய்யா**
**பச்சவெறகு பத்த நேரமாகுதய்யா**
**கண்ணு கலங்குதய்யா**
**கை நீட்ட நியாயமுண்டா"**[3]

எனும் கவிதையில் பணிக்குச் செல்லும் பெண்ணின் வாழ்க்கை காட்சிப்படுத்தப் பெறுகின்றது. கூலி வேலைக்குச் செல்லும் பெண், பள்ளிக்குப் போன குழந்தையைப் பற்றி நினைத்துக் கொண்டு கண்ணீர் வடித்துக், கூலி நெல்லைப் பெற்றுத் தன் வீடு திரும்புவதற்கு ஏழு மணி ஆகிறது. பிறகு உணவு செய்ய விறகு பற்றவில்லை என்று காரணம் காட்டி அவளைக் கணவன் அடிக்கிறான். கணவன் தன் உடல் வலிக்கிறது என்று கூறி மது அருந்தி விட்டு வீட்டிற்கு வருகிறான். ஆனால் மனைவிக்குக் கண்ணீரைத் தாண்டி எதுவும் இல்லை என்று பெண்களின் துயரநிலை நாளும் அவளைத் துரத்துகிறது என்று உழைக்கும் பெண்ணின் துயரநிலையைக் கவிஞர் இளம்பிறை, மேற்காண் கவிதை வரிகளில் எடுத்துரைக்கின்றார்.

**இசுலாத்தில் பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம்**

பெண்கள் தங்கள் சொந்தத் தொழிலை நடத்தலாம், சம்பாதிக்கலாம், மற்றும் அதை நிர்வகிக்கலாம். அந்தப் பணத்தில் கணவருக்கு உரிமை இல்லை என்று இசுலாம் வலியுறுத்தி உள்ளது. அதுபோல, பெண்கள் கல்வி, மருத்துவம், செவிலியர், தையல் போன்ற பெண்களுக்கு

ஏற்ற துறைகளில் பணியாற்றலாம் அதற்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை என்று இசுலாம் கூறுகிறது.

**இசுலாத்தில் பெண்களின் வேலை குறித்த நிபந்தனைகள்**

இசுலாம் சமயத்தில் ஒரு பெண் வேலைக்கு செல்ல வேண்டும் என்றால் அவள், அவளுடைய கணவர் அல்லது பாதுகாவலரின் அனுமதியைப் பெற வேண்டும். முழுமையான இசுலாமிய ஹிஜாபை அணிய வேண்டும். அந்நிய ஆண்களுடன் தனிமையில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். குடும்பப் பொறுப்புகளை (குழந்தை வளர்ப்பு, வீட்டை நிர்வகித்தல்) பாதிக்கும் வகையில் வேலை இருக்கக்கூடாது. இதுவே இசுலாத்தில் பெண்களின் வேலை குறித்த நிபந்தனைகள் என்று பல ஹதீசுகளில் காண முடிகிறது.

**இசுலாத்தில் பெண்களின் முன்னுரிமை**

இசுலாத்தில் பெண்கள் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை, ஏனெனில் அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு தந்தை, கணவர் அல்லது சகோதரனுக்கு உள்ளது. இருப்பினும், சமூகத்தின் தேவைக்காக (உதாரணமாக பெண் மருத்துவர்) அவர்கள் பணிபுரிவது சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இதனைச் சேவை மனப்பான்மையோடு செய்ய வேண்டும் என்பதை இசுலாம் வலியுறுத்துகிறது.

**இசுலாத்தில் பெண்களின் வீட்டு வேலை**

பெண்கள் வீட்டில் செய்யும் வேலைகளுக்குச் சிறப்பு முக்கியத்துவம் உள்ளது என்பதை இசுலாம் கூறுகிறது. ஒரு பெண் அந்த வீட்டின் வேலைக்காரி அல்ல எனவும் அவளுடைய வேலையில் சில உதவிகளை தன் தந்தை , சகோதரன், கணவன் (ஆண், பெண்) என வித்தியாசம் பார்க்காமல் அவளுக்கு உதவி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது. இசுலாம் பெண்களுக்கு வேலை செய்யும் உரிமையை மறுக்கவில்லை, மாறாக, அவர்களின் கண்ணியத்தையும் குடும்பப் பொறுப்பையும் பாதுகாக்கும் வகையில் அந்த உரிமையை ஒழுங்குபடுத்துகிறது என அறிய முடிகிறது.

**பெண்களின் வறுமை நிலையைத் தவிர்க்கும் இசுலாம்**

சமூகத்தில் வறுமை நோய் என்பது நாள்தோறும் நீண்டு கொண்டே போகிறது. அது பெண்களையும் தாக்கியதைக் காணமுடிகிறது. ஆனால், இசுலாம் பெண்களுக்கு முழுமையான பொருளாதாரச் சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் வழங்கியுள்ளது என அறிய முடிகிறது.

இசுலாமியச் சட்டத்தின்படி, பெண்கள் வறுமையில் வாடுவதைத் தவிர்க்கவும், அவர்களின் நிதி நிலையை உறுதிப்படுத்தவும் பல்வேறு வழிகாட்டுதல்களை இசுலாம் கூறியுள்ளது.

> **"வெந்த மனந்தவிக்கும்**
> **பிள்ளை அழுதிருக்கும்**
> **பேச்சற்று வாய்தவிக்கும்**
> **சொல்ல முடியாத சோகத்தால் கண்கள்**
> **சக்தியற்று நீர் வடிக்கும்"**[4]

மனம் நொந்து அவள் அழுதுக்கொண்டு இருக்கையிலே சொல்ல முடியாத சோகத்தில் உடல் நலிந்து இருக்கும். இந்த நிலையிலே பல இடங்களில் அழகிப்போட்டி என்றெல்லாம் வைத்து வறுமையில் இருப்பவர்களை இழிவுபடுத்தும் நிலையை தொலைக்காட்சியில் காட்டுகின்றார்கள். நம் சமூகத்தில் வறுமையை ஒழிக்க வேண்டுமே தவிர அதை ஒருபோதும் பழிக்கக் கூடாது என்று இலக்கியங்கள் வழி பெண்ணின் வறுமை நிலையைக் காணமுடிகிறது.

**இசுலாத்தில் பெண்களுக்கு தனிச் சொத்துரிமை**

இசுலாத்தில் ஒரு பெண்ணின் திருமணத்திற்கு முன்பும் பின்பும் தனது சொத்து, பணம் மற்றும் பிற சொத்துக்கள் மீது முழு உரிமை உண்டு. அந்தச் சொத்தை விற்கவோ, வாங்கவோ, அடமானம் வைக்கவோ அவருக்கு முழு சுதந்திரம் உள்ளது.

**இசுலாத்தில் பொருளாதாரப் பொறுப்பு ஆண்களுக்கு**

குடும்பத்தின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு முழுமையாக ஆண்களுக்கே (கணவன், தந்தை, சகோதரன்) உள்ளது. மனைவி சம்பாதிப்பவராக இருந்தாலும், குடும்பச் செலவுகளை கணவனே ஏற்க வேண்டும் என்பது கட்டாயமாகும். அதுபோல, மஹர் (மணக்கொடை) திருமணத்தின் போது கணவன் மனைவியிடம் இருந்து எதையும் எதிர்பார்ப்பதற்குப் பதிலாக, மனைவிக்குக் கட்டாயமாக மஹர் வழங்க வேண்டும். இது பெண்ணின் நிதிப் பாதுகாப்பிற்காக வழங்கப்படும் தொகையாகும் என்று இசுலாம் கூறுகிறது. கணவர் தனது மனைவியின் உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளார் என்பதையும் இசுலாம் வலியுறுத்துகிறது. இதுபோல இசுலாம் பெண்களின் நிதிச் சுமைகளைக் குறைத்து, அவர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் மதிப்பானப் பொருளாதாரச் சூழலை உறுதி செய்வதைக் காண முடிகிறது.

**குடும்பத்தில் பெண்களின் மதிப்பு நிலை உயர்த்தும் இசுலாம்**

இசுலாமிய குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கு மிக உயர்ந்த, கண்ணியம் மற்றும் பாதுகாக்கப்பட்ட நிலை வழங்கப்பட்டுள்ளது என பல ஹதீசுகளில் காணமுடிகிறது.

**இசுலாத்தில் மகளாக இருக்கும் பெண்ணின் மதிப்பு**

இசுலாமிய குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தால் அந்த வீட்டிற்கு பரகத் (இறைவனின் ஆசிர்வாதத்தின் மிகுதி) கிடைத்து உள்ளது என்று மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள் என்று பல ஹதீசுகளில் காணமுடிகிறது. அதே குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால் மறுமை நாளில் இறைத் தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பக்கத்தில் ஒட்டி நிற்கலாம் என்று திருகுரானில் கூறப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து அவர்களுக்குச் சரியான முறையில் திருமணம் செய்து வைக்கும் பெற்றோர்கள் சொர்க்கத்தைச் சென்றடைவார்கள் என்று இசுலாம் கூறுகிறது.

**இசுலாத்தில் மனைவியாக இருக்கும் பெண்ணின் மதிப்பு**

தாய்க்குப்பின் தாரம் என்பது போல ஒரு ஆண்மகனுக்கு அவனுடைய திருமணத்திற்கு முன்பு அவன் தாய் தான் முழுமையான துணையாகக் கருதப்படுகிறாள் அதுபோல, அவன் திருமணத்திற்கு பின் அவனுடைய மனைவி தான் அவனுக்கு ஒரு முழு துணையாக ஆகிறாள். இசுலாத்தில் ஒரு பெண்ணின் திருமணத்தில் அவளுடைய மனப்பூர்வமான சம்மதத்தைக் கட்டாயம் கேட்கப்படுகிறது. அவள் திருமணத்தின்போது கொடுக்கப்படும் 'மஹ்ர்' (மணக்கொடை) அது பெண்ணுக்கு மட்டுமே சொந்தமானது, அதைக் கணவர் எடுத்துக்கொள்ள முடியாது என்பதை இசுலாம் உணர்த்துகிறது. தன் மனைவிக்கு அன்பும், கருணையும், பாதுகாப்பும் அளிப்பது ஒரு நல்ல கணவனின் கடமையாகும் என்கிறது. தன் குடும்ப முடிவுகளை மனைவியிடம் ஆலோசனையும் உடன்பாடும் கேட்டுதான் முடிவு எடுக்க வேண்டும் என்று இசுலாம் வலியுறுத்துகிறது.

**இசுலாத்தில் தாயாக இருக்கும் பெண்ணின் மதிப்பு**

தாய் என்றாலே சிறந்தவள் தான். இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் தாய் தான் முதன்மைக் காரணமாகத் தோன்றுகிறாள். "தாயின் காலடியில் சொர்க்கம் உள்ளது" என்பது இசுலாமிய போதனையாக ஹதீசுகளில் கூறப்படுகிறது. இசுலாத்தில் தந்தையை விட தாய்க்கு மூன்று மடங்கு அதிக மரியாதை மற்றும் சேவை செய்ய வேண்டும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல ஹதீசுகளில் கூறியுள்ளார்.

**இசுலாத்தில் குடும்பப் பொறுப்பு**

ஒரு குடும்பம் என்றாலே குடும்பத் தலைவன், குடும்பத் தலைவி என்பவர்கள் இருப்பார்கள் அதில் ஆண்கள் தங்கள் குடும்பத்தின் பொறுப்பாளர்களாகவும், பாதுகாப்பாளர்களாகவும் இசுலாத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது, இது சர்வாதிகாரம் அல்ல, மாறாக தங்கள் குடும்பத்திற்குச் சேவை செய்யும் பொறுப்பாகும்.

ஆகவே, இசுலாத்தில் பெண்கள் தங்கள் குடும்பத்தின் இதயப்பகுதியாகக் கருதப்படுகிறார்கள், என்று இசுலாத்தின் வழி அறிய முடிகிறது.

**“அடுக்களை நெருப்பில்**
**அன்றாடம் நின்றும்**
**நம் உணர்வுகள் இன்னும்**
**சூடேறவில்லையடி”**[5]

எனும் கவிதையில், வீட்டின் சமையல் அறையில் பெண்கள் நாள்தோறும் வேலை செய்து கொண்டே இருக்கின்றனர். வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் சலிக்காமல் செய்கின்றனர். குடும்பத்தில் உள்ளவர்களை வழி நடத்துகின்றனர், உறவினர்களை உபசரிக்கின்றனர். அப்படிப்பட்ட பெண்கள் இன்றும் தங்கள் குடும்பத்தில் மதிக்கப்படுவதில்லை என்பது உணர்த்தப்பெறுகின்றது. இவ்வுண்மையைப் பாரதியாரின் பெண்விடுதலைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது. பாரதிதாசன் பெண்களை குடும்பவிளக்கு என்று மையப்படுத்திக் குறிபப்பிடுகிறார். ஆனால் தற்போதுள்ள சமூகத்தில் பெரும்பான்மையான சூழல்களில் பெண்கள் துன்புறுத்தப்படுகின்றனர் என்று அறிய முடிகிறது.

**இசுலாத்தில் கணவன் மனைவியின் சிறப்பு**

இசுலாத்தில் கணவன்-மனைவி உறவு என்பது வெறும் பந்தம் மட்டுமல்ல, அது ஒரு புனிதமான உடன்படிக்கை மற்றும் சமூகத்தின் அடித்தளமாகக் கருதப்படுகிறது. இந்த உறவு அன்பு, கருணை மற்றும் மரியாதையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது என அறியமுடிகிறது . இசுலாத்தில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஆடையாக இருக்கிறார்கள் என்று குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. ஆடை உடலை மறைப்பது போல, ஒரு கணவன் தன் மனைவியின் குறைகளை மறைத்து, மானத்தைப் பாதுகாத்து, இக்கட்டான சூழ்நிலைகளில் பாதுகாப்பாய் இருக்க வேண்டும் என இசுலாம் வலியுறுத்துகிறது. ஒரு திருமணத்தின் நோக்கம் என்னவென்றால், “ஒரு கணவன்-மனைவி தங்களுக்குள் அன்பு, கருணை மற்றும் மன அமைதியைக் கண்டடைவதாகும்.”6 என பல ஹதீசுகளில் கூறப்பட்டுள்ளது. நல்ல மனைவியே சிறந்த செல்வம் என்பதைப் போல நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "இவ்வுலகம் முழுவதும் பயனளிக்கும் செல்வங்களே! அதில் மிகவும் மேலானது நல்ல மனைவியே"7 என்று கூறியுள்ளார் என்பதைப் பல ஹதீசுகளில் காணமுடிகிறது.

**இசுலாத்தில் கணவன் – மனைவி உரிமைகள் மற்றும் கடமைகள்**

இவ்வுலகில் பொதுவாகவே எல்லோருக்கும் கடமைகள் உள்ளன. அதில் கணவன் - மனைவி என்றால் ஒரு குடும்பத்தின் தூண்கள் என்றே கூறலாம். அத்தகைய கணவன் – மனைவியின் கடமைகள் என இசுலாத்தில் கூறப்படுவது என்னவென்றால் ஒரு கணவன் தன் மனைவிக்கு 'மஹர்' (திருமணப்பரிசு) கொடுப்பது, உணவு, உடை, இருப்பிடம், மருந்துகள் போன்ற அவளுடைய தேவைகளைத் தனது வசதிக்கு ஏற்ப நிறைவேற்றுவது ஒரு நல்ல கணவனின் கடமை என இசுலாம் கூறுகிறது. அதுவே ஒரு மனைவியின் கடமை என்னவென்றால் அவளுடைய கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல், கணவனின் கண்ணியத்தைக் காத்தல், குடும்பப் பொறுப்புகளைச் சரிவர கவனித்தல் மற்றும் மார்க்க வழிபாடுகளில் கவனம் செலுத்துவது ஒரு நல்ல மனைவியின் கடமை என இசுலாம் வலியுறுத்துகிறது. அதுபோலவே, ஒருவருக்கொருவர் அன்பாகவும், பிரியமாகவும் இருக்க வேண்டும். ஒருவர் மனது புண்படும்படி பேசக்கூடாது, மற்றவர்கள் முன்னிலையில் கணவனைப் பற்றி மனைவியோ, மனைவியைப் பற்றி கணவனோ அவர்களுடைய குறைகளைச் சொல்லக்கூடாது எனவும் இசுலாம் வலியுறுத்துகிறது. எனவே, இசுலாம் கணவன்-மனைவி எனும் உறவை பரஸ்பர மரியாதை மற்றும் தியாகத்தின் அடிப்படையில், இருவருடைய மார்க்க மற்றும் உலக வாழ்வில் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் ஒரு உறவாக

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

இருக்கிறது என அறியமுடிகிறது. ஆனால் இன்றைய சமூகத்தில் ஒரு ஆணும் பெண்ணும் தங்களுடைய திருமண வாழ்வின் ஆரம்பத்தில் இன்பமாகவும் பின் சில காலங்கள் கழிந்து செல்லும் போது இருவருக்கும் இடையில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிவு நோக்கி செல்லும் நிலை தான் அதிகமாக காணமுடிகிறது. அதுபோல,திருமணத்திற்கு பின் தன்னையும் தன் குழந்தையையும் விட்டு செல்வதாகவும் இங்கு அன்பு, பாசம், மனிதநேயம் போன்ற குணங்கள் காணாமல் போனதையும் அறிய முடிகிறது.

**சமூகத்தில் இசுலாமிய பெண்களின் பாதிப்புகள்**

பெண்கள் நம் நாட்டின் கண்கள் என்று கூறும் நிலைமாறி பெண்கள் பல இடங்களில் கழுத்தறுக்கப்பட்டும், காம வெறியால் சூறையாடப்பட்டும், குடிகாரர்களால் குடும்ப வாழ்வில் நிலை குழைந்தும், காதல் மறுப்பால் உடலில் அமிலங்களை வீசி உடல் சிதைக்கப்பட்டும், வலைத்தளங்களில் நிர்வாணப் படங்களாகப் பதிவு செய்யப்பட்டும் வருகின்றது. நம் நாடு விடுதலை அடைந்தாலும் பெண் விடுதலை என்பது இன்றும் நிறைவேறாமலே உள்ளது. பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுப் பல பெண்கள் முள் புதர்களிலும் காடுகளிலும் உடல் சிதைக்கப்பட்டு வீசப்படுகின்றனர். குறிப்பாக காஷ்மீரில் ஆசிபா என்ற எட்டு வயதுச் சிறுமி இந்துத்துவ பயங்கரவாதியால் கோவிலுக்குள் பல நாட்கள் சிறைவைத்து தொடர்ச்சியாகப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, அவளின் முதுகுத்தண்டை உடைத்து கொடூரக் கொலை செய்யப்பட்டாள். அந்தக் குழந்தை தான், எதற்காகக் கொலை செய்யப்படுகிறோம் என்பதைக் கூட தெரியாத சின்ன சிறிய குழந்தை. ஏன்? அவள் கொலை செய்யப்பட்டாள்? அவள் இசுலாமிய சமூகத்தைச் சார்ந்தவள் என்பதாலா, இல்லை மனிதனின் காம இச்சையா? என பல சம்பவங்கள் இங்கு நடந்து உள்ளதை அறியலாம். சாதி சமயமற்ற நம் இந்திய நாட்டிலே தற்போது இசுலாமியர்களுக்கு வாடகைக்கு வீடு கிடைப்பதில்லை ஏன் என்று தெரியுமா? இசுலாமியர்கள் என்றாலே தீவிரவாதிகள் எனச் சித்தரிக்கப்படுகின்றனர். ஆகவே, சமூகத்தில் இசுலாமியப் பெண்கள் பெரிதும் இன்னல்களை அனுபவித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். எப்போது என்ன ஆகுமோ என்று பயந்து பயந்து வாழ்வது ஒரு வாழ்க்கையா இதுபோல பல துன்பங்களை ஏற்றுக் கொண்டு இசுலாமியர்கள் வாழ்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

சமூகத்தில் மனித இனம் விரிவடையும் மனப்பாங்கு அடையவும், குடும்பக்கோட்பாடு முழுமை பெறவும் பெண்ணே ஆதாரமாக விளங்குகின்றாள். ஆனால், அப்படிப்பட்டப் பெண்ணுக்கு வறுமைநிலை, தற்கொலை, திருமண உறவுமுறை, உடல் மற்றும் உளரீதியான சிக்கலகள் பல ஏற்படுகின்றன. மனிதர்கள் இரத்தமும், சதையும் இயைந்தவர்கள். அவற்றுள், ஆண் என்பவனும் பெண் என்பவளும் சமமே. அதனால் ஒரு உயிரைப் பாலின பேதமின்றி உயிராக மதிக்கக் வேண்டும் எனும் இசுலாத்தின் பெண்ணியச் சிந்தனை இக்கட்டுரை வாயிலாக விவரிக்கப்பெற்றுள்ளது.

**குறிப்புகள்**

[1] இளம்பிறை, *நீ எழுத மறுக்கும் எனதழகு*, ப. 44
[2] இளம்பிறை, *நீ எழுத மறுக்கும் எனதழகு*, ப. 45
[3] *தமிழ் இலக்கிய வரலாறு*, பாக்கியமேரி, ப. 23
[4] இளம்பிறை, *நீ எழுத மறுக்கும் எனதழகு*, ப. 50
[5] இளம்பிறை, *நீ எழுத மறுக்கும் எனதழகு*, ப. 51
[6] *திருகுர்ஆன்* (30: 21)
[7] *திருகுர்ஆன்* (27: 18)
[8] *திருகுர்ஆன்* (25: 11)
[9] *திருகுர்ஆன்* (16: 13)

**Volume 4, Issue 1 June 2026** **E-ISSN: 2584-167X**

[10] *தமிழ் இலக்கிய வரலாறு*, மதுசாவிமலானந்தம், ப. 23

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.